**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 24/2021 |
| Name | : Chellamuthu |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2026**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**2ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மடத்துக்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று தற்போது உடுமலைப்பேட்டையில் வசித்து வருகிறேன். கடந்த 14.11.2020 அன்று மாலை கணியூர் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த குப்புச்சாமி மகன் பொன்னுகுமார் பேச முடியாத நிலையில் இருந்ததால் மருத்துவமனையில் சில மணி நேரம் இருந்து பின்பு நிலையம் வந்து 15.11.2020 ம் தேதி உடுமலை அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது பொன்னுகுமார் சிகிச்சையில் இருந்து தன்னிச்சையாக சென்றுவிட்டார் என்பதால் நான் நிலையம் வந்து பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேன். மீண்டும் 16.11.2020 ம் தேதி காலை உடுமலை கோகுல் பாலிகிளினிக்கில் கிடைத்த இண்டிமேசன் பேரில் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த தாமரைப்பாடியில் வசிக்கும் பொன்னுகுமார் என்பவரை விசாரித்து

புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து கணியூர் காவல் நிலைய குற்ற எண். 694/2020 இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளர் நடராஜ் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 14.11.2020 மாலை 17.30 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 3 வது காலத்தில் தகவல் 16.11.2020 காலை 08.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.11.2020 ம் தேதி உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து எத்தனை மணிக்கு இண்டிமேசன் கிடைத்தது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கும், எதிரிகளுக்கும் முன் விரோதம் இருந்ததாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் கணியூர் காவல் நிலையத்திற்கும் இடையே 4 கி.மீ இருப்பதாக முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 க்கும், எதிரிகளுக்கும் இருந்த முன் விரோதம் காரணமாக பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.27 17:27:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்